**செய்தி வெளியீடு எண்: 377** **நாள்: 30.06.2012**

**தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை – 600 006.**

**பாடநூல்கள் சிறப்பு விற்பனை:**

**11ம் வகுப்பு பாடநூல்கள் கிடைக்காத மாணவர்களுக்கு பாடநூல் கழகம் சிறப்பு ஏற்பாடு:**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் இந்த ஆண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களின் தேவையையும் நலனையும் கருத்திற் கொண்டு அவர்களுக்கு தேவையான விலையில்லா மற்றும் விற்பனை பாடநூல்களை பள்ளிகள் திறக்கும் முன்னரே அச்சடித்து விநியோகம் செய்யப்பட்டது அடுத்த கட்டமாக 1 முதல் 9ம் வகுப்பு வரையிலான பாடநூல்களை பள்ளி திறக்கும் நாளன்றே அனைத்து மாணவர்களுக்கும் பாடநூல்கள் கிடைத்திடும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது இறுதிக் கட்டமாக 11 ஆம் வகுப்பு இலவசப் பாடநூல்கள் அச்சகங்களில் இருந்து நேரடியாக அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு மாணவர்களுக்கு உடனடியாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தனியார் (மெட்ரிக்) பள்ளிகளுக்கான விற்பனை பாடநூல்கள் 14.06.2012 முதல் சென்னை தரமணியில் உள்ள தலைமை பாடநூல் கிடங்கிலிருந்து சென்னை மாவட்ட பள்ளிகளுக்கும் 18.06.2012 முதல் பாடநூல் சில்லரை விற்பனையாளர்களுக்கும் நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழகம் முழுவதிலுமுள்ள இதர 21 பாடநூல் கழக வட்டார அலுவலகங்களிலும் பள்ளிகள் மற்றும் சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் உள்ள பாடநூல் கழகத்தில் 11 ஆம் வகுப்புக்கென மூன்று விற்பனை மையங்கள் துவக்கப்பட்டு பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் சில்லரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பாடநூல் கழகத்தில் இருந்து பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் மெட்ரிக் பள்ளி இயக்குநர் ஆகியோர் மூலம் அனைத்து பள்ளிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு சென்னை கிடங்கு உட்பட 22 வட்டார அலுவலகங்களிலும் பாடநூல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பாடநூல் சில்லரை விற்பனையாளர் சங்க நிர்வாகிகளுக்கும், தகவல்கள் தெரிவிக்கப்பட்டு அனைத்து சில்லரை விற்பனையாளர்களும் தமிழ்நாடு முழுவதும் பாடநூல் விற்பனை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரிக் பள்ளிகள் சங்கத் தலைவர் மூலம் தனியார் பள்ளிகளுக்கு தகவல் தெரிவித்து பாடநூல்களை பெற்றுச் செல்ல கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இதுவரை சென்னை தலைமை அலுவலகத்தில் மட்டும் சிறப்பு விற்பனை மையங்கள் மூலம் பாடநூல் சில்லரை விற்பனை நடந்து வந்தது. வெளியூரிலிருந்து பாடநூல்களை பெற பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் சென்னைக்கு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு தற்போது காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், பர்கூர், சேலம், ஈரோடு, கோவை, திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், மானாமதுரை, கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் சிவகாசி வட்டார அலுவலகங்களில் அனைத்து வகுப்புகளுக்குமான பாடநூல்கள் நேரடியாக சில்லரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பள்ளிகள் தாமாக முன்வந்து பாடநூல்களை வாங்கித்தராததால் பாடநூல்கள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் மேற்கண்ட வட்டார அலுவலகங்களில் நேரில் சென்று ரொக்கம் செலுத்தி பாடநூல்களை பெற்றுக் கொள்ளலாம்.

சில்லரை விற்பனையாளர்கள் பாடநூல்களை அதிக விலைக்கு விற்றாலோ வழிகாட்டி கைடுகளை வாங்க வற்புறுத்தினாலோ அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012–2013 ஆம் கல்வி ஆண்டுக்குத் தேவையான பாடநூல்கள் போதுமான அளவு அச்சடிக்கப்பட்டு பள்ளிகள், சில்லரை விற்பனையாளர்கள், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் நேரடி சில்லரை விற்பனை என அனைத்து வழிகளிலும் பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எவ்வித கவலையும் இன்றி பாடநூல்களை பெறலாம்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**